காவி உடைகளின் கபட நாடகம்

(பி.ஜே.பி. மதவெறி பாசிச அரசியலுக்கு மார்க்சிய-லெனினியத்தின் பதிலடி)

வினோத் மிஸ்ரா

தீப்பொறி வெளியீடு.1

விலை ரூ 3.00

அறிமுகம்

இந்தியகம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்)யின் கொள்கையைத் துல்லியமாகவும் தெளிவாகவும், எளிமையாகவும் விளக்குகிறது இக்கட்டுரை. மதத்தைப் பற்றிய கம்யூனிஸ்டுகளின் நோக்கு நிலையை விரித்துரைப்பது இக்கட்டுரையின் நோக்க மல்ல. மதத்திற்கும் அறிவியலுக்கும்; மாயா வாதத்திற்கும் பகுத்தறிவுக்கும் இடையிலான மோதலில் பட்டிமன்ற வெற்றியை அவர் குறி வைக்கவில்லை. இவ்வரிய படைப்பு, அரசியல் போர் முனைக்குச் செல்லும் கம்யூனிஸ்டுகள், ஜனநாயக வாதிகள், தேசபக்தர்களுக்கு நடைமுறை சார்ந்த பகுத்தறிவுப் போர்வாள் ஒன்றைக் கூர் தீட்டித் தருகிறது. மான் ஒன்றின் வடிவத்தை வருணிப்பதல்ல, மான்வடிவில் வரும் மாரீசனை தோல் உரிப்பதுதான் தோழர் வி.எம். அவர்களின் பேனா முனையின் நோக்கம்.

ஆதிக்கத்தின் எதிர்வினையாக எழுந்தது நாத்திகவாதம். ஆனால், மதம் பற்றிய கம்யூனிஸ்டுகளின் பார்வை, மானுடத்தின் வரலாற்று வளர்ச்சியைப் பகுத்தறிந்ததால் விளைந்தது. இது முரணற்றது. மிகத் தெளிவானது. அதைக் கம்யூனிஸ்டுகள் ஒருபோதும் ஒளித்து வைக்க மாட்டார்கள்.

சொர்க்கம் என தான் புனைந்து கொண்ட கற்பனா உலகத்தில் தனக்குமேலான சக்தியைத் தேடியது மானுடம். அங்கு தன்னுடைய பிம்பத்தைத் தவிர வேறொன்றையும் காணமுடியவில்லை. அந்த முயற்சியைக் கைவிட்டு தன்னுடைய உண்மையான யதார்த்தத்தைத் தேடும் மானுடத்திற்கு அங்கே இருப்பது மனிதத்தன்மையற்ற ஒன்றேயாகும். மதம் மானுடத்தை உருவாக்கவில்லை; மானுடம் தான் மதத்தை உருவாக்குகிறது. மதம் சார்ந்த துயரம் என்பது, அதே நேரத்தில் உண்மையான துயரத்தின் வெளிப்பாடும் அந்த உண்மையான துயரத்திற்கெதிரான போராட்டமும் கூட.

மதம் என்பது ஒடுக்கப்பட்டவர்களின் ஏக்கப் பெருமூச்சு, ஜீவனற்ற உலகத்தின் ஜீவன். இதயமற்ற உலகின் இதயம். அது

மக்களின் அபினி. மதத்திற்கெதிரான போராட்டம் என்பது மதத்தை ஆன்மீக மாயையாகக் கொண்ட இந்த உலகத்திற் கெதிரான போராட்டமாகும்.

மதம், மக்களுக்குப் போலி மகிழ்ச்சியைத் தருகிறது. மதத்தை ஒழிக்க வேண்டுமானால் மக்களின் உண்மையான மகிழ்ச்சியைக் கோர வேண்டும். நிலவுகின்ற மாயைகளை கைவிடக் கோருவது என்பது, மாயைகளை தோற்றுவித்த நிலமைகளைக் கைவிடக் கோருவதாகும். எனவே, மதத்தைக் குறித்த விமர்சனம், மதத்தை ஒளிவட்டமாகக் கொண்ட துயரத்தின் ஊற்றுக் கண்ணை விமர்சிப்பதைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டது.

மதம் குறித்த விமர்சனம் மானுடத்தை மாயையிலிருந்து விடுவிக்கிறது; அதனுடைய யாதார்த்தத்தை வடிவமைத்துத் தருகிறது. இதன் மூலம்தான் மானுடம் தன்னைப் பற்றிச் சிந்திக்கவும், தன்னுடைய உண்மையான சூரியனை வலம் வரவும் முடியும். மானுடம் தன்னைப் பற்றி சிந்திக்காதவரை மதம் என்ற போலிச் சூரியன் அவனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கும். உண்மையைப் பின்னுக்குத் தள்ளிய உலகு மறைந்த பின்பு, இவ்வுலக உண்மைகளை நிறுவுவது வரலாற்றின் கடமையாகும்.

இவ்வாறாக, சொர்க்கத்தைப் பற்றிய விமர்சனம் பூவுலகைப் பற்றிய விமர்சனமாக, மதம் பற்றிய விமர்சனம் சட்டம் பற்றிய விமர்சனமாக, இறையியல் குறித்த விமர்சனம் அரசியல் குறித்த விமர்சனமாக மாறும்.

விமர்சன ஆயுதம் நிச்சயமாக ஆயுத விமர்சனத்திற்கு மாற்றாக முடியாது. பொருளீய சக்தியைப் பொருளீய சக்தியால்தான் தோற்கடிக்க முடியும். தத்துவம் மக்களைப் பற்றிக் கொண்ட வுடன் அதுவே பொருளீய சக்தியாகிறது. தத்துவம் தர்க்கரீதியான உணர்ச்சிகளை வெளிக்கொண்டு வருகிறது.

அடிப்படை மாற்றத்திற்கு விஷயங்களின் ஆணிவேரைப் பற்ற வேண்டும். மானுடத்தின் வேர் மானுடம் தான். புரட்சிகரத் தத்துவத்தின் மதம் பற்றிய விமர்சனம்–மதத்தை ஒழிப்பதிலிருந்து தொடங்கி மானுடத்திற்கு அதிக பட்சம் உயர்ந்தது மானுடம் என அறுதியிடுவதில் முடிகிறது. எனவே, மானுடத்தை தாழ்த்துகின்ற, அடிமைப்படுத்துகின்ற, கைவிடுகின்ற, இழிந்த பிறவிகளாக்குகின்ற

அனைத்து உறவுகளையும் தூக்கி எறியவேண்டியது திட்டவட்டமாக இன்றிமையாதது.

நாத்திகவாதம், தடுமாறி ஒருவனே தேவனில் பின்வாங்கி குலக் கடவுள்களில் புகலிடம் தேடி கடவுளைத் தனதாக்கிக் கொண்டு தங்களை ஆதிக்கப் பார்ப்பனர்களாக்கி'பார்ப்பனர் ஆதிக்கத்தை' தகர்ப்பது; மடாதிபதியையும் மகுடம்தரித்த பேரரசனையும் மனதுள் வாங்கிக் கொண்டு மத்திய காலத்தை இல்லாததாக்குவது.

இவை மனிதன் முன்னேறியதின் அடையாளங்கள் அல்ல.

உடலைச் சங்கிலியிலிருந்து விடுவித்து இதயத்தை அடிமைத்தனத்தில் பிணைப்பது அதைவிட மோசமானது. தங்களுக்குள்ளே இருக்கும் பூசாரியிடமிருந்தும் பூசாரித் தனத்திலிருந்தும்– மடாதிபதியிலிருந்தும் மடாதிபதி வழிபாட்டு உணர்விலிருந்தும்; உயர் நாட்டமோ பண்பாடோ இல்லாதவர் களின் படாடோப மயக்கங்களிலிருந்தும் மக்கள் மனவிடுதலைப் பெற புரட்சிகரத் தத்துவம் வழிகாட்ட வேண்டும்.

அன்று காரல் மார்க்ஸ் ஜெர்மனிக்குக் கூறியது இன்று தமிழகத்திற்கு சிறப்பாகப் பொருந்துமல்லவா?

"மனிதருள் மனிதனே அதிஉயர்ந்த பிறவி என்கிற தத்துவ நிலைப்பாட்டிலிருந்து துவங்கும் விடுதலையே ஜெர்மனிக்கான ஒரே சாத்தியக் கூறுள்ள நடைமுறைச் சாத்தியமான விடுதலை.

ஜெர்மனிக்கு மத்திய காலத்திலிருந்து விடுதலை வேண்டுமென்றால் மத்திய காலத்திலிருந்து அரைகுறையாகப் பெற்ற வெற்றியிலிருந்து விடுதலைப் பெற வேண்டும்.

தமிழக மக்களிடம் ஒரு கருத்தியல் புரட்சி தேவை என உணரும் மார்க்சியவாதிகளுக்கும், தேசபக்த ஜனநாயக சக்திகளுக்கும் பகுத்தறிவாளர்களுக்கும் தமிழக மக்கள் அனைவரின் முன்னேற் றத்தில் ஈடுபாடு கொண்டுள்ள முற்போக்காளர்களுக்கும் தோழர் வினோத் மிஸ்ராவின் இந்த அரியபடைப்பு பயன்படும் என்பது நிச்சயம். நாட்டை மதவெறியின் பேரழிவிலிருந்து காக்க இங்கு முன் மொழிந்துள்ள நாட்டுப்பற்றுடைய தீர்வை ஏற்பார் கள் என்ற நம்பிக்கையோடு.

பி.வி.சீனிவாசன். *15–01–1994*

சங்கப் பரிவார்: சுதந்திரப்போராட்ட இலட்சியத்தின் துரோகிகள்.

1942இல் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கு மிகவும் கொச்சைப்படுத்தப் படுகிறது. அந்தக் காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் துரோகம் என்று கூறப்படுவதை இங்கும் அங்குமாகத் தனது சொந்தச் சரக்குகளை இட்டுக்கட்டி அம்பலப்படுத்துவதற்காக திரு.அருண்சோரி பழைய ஆவணக் கிடங்குகளை கிளறினார். கம்யூனிஸ்ட் கட்சி சில செயல் தந்திர தவறுகளை இழைத்தது என இந்தியாவிலுள்ள அனைத்துக் கம்யூனிஸ்டு அமைப்புகளும் ஏற்றுக் கொள்கின்றன. இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி நீங்கலாக சுதந்திரப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து ஒரு முக்கியமான அங்கமாக திகழ்ந்துள்ளனர். போர்க்குணம் மிக்க சுதந்திரப் போராட்ட வீரர்கள், ஒன்று, பகத்சிங் போன்று, சோவியத் யூனியனின் வெற்றிகரமான அக்டோபர் புரட்சி மற்றும் கம்யூனிசக் கருத்தியலால் உத்வேகம் அடைந்தார்கள் அல்லது ஏராளமானோர் கம்யூனிசத்தை நோக்கி படிப்படியாக உந்தப்பட்டனர்.

இந்துத்துவத்தின் முதல் கருத்துரையாளரான சவார்கர் ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டத்தின் ஆரம்பக் காலகட்டத்தில் தீரமான பங்காற்றினார், ஆனால் இருபதுகளின் நடுவில் இந்து மகாசபையின் தலைவர் ஆனதிலிருந்து, ஆங்கிலேயருடன் மிகத் தெளிவான சமரசப் போக்கை கடைபிடிக்கலானார்.

அது எந்த அளவுக்குச் சென்றது என்றால் 1942 இயக்கத் தின்போது, உள்ளாட்சி அமைப்புகளிலும், சட்ட மன்றங்களிலும் மற்றும் சேவைகளிலும் உள்ள இந்து மகாசபை உறுப்பினர் களிடம், "உத்தியோகத்தில் ஊன்றி நில்லுங்கள், வழக்கமான பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுங்கள் " என்று அவர் கேட்டுக் கொண்டார்.

சவார்க்கரும் அவருடைய இந்து மகாசபையும் நஞ்சூட்டும் முஸ்லீம் எதிர்ப்பு பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டதும்

"அரசியலை இந்துமயமாக்குங்கள், இந்துவாதத்தை ராணுவ மயமாக்குங்கள்" என்று அழைப்பு விடுத்ததும் ஆங்கிலேய ருடனான முழுப் போர்க்கால கூட்டையே பிரதிபலிக்கிறது. (வி.டி. சவார்க்கர், Historic Statements 1957). ஆர்.எஸ்.எஸ்ஸின் ஸ்தாபகரான ஹெக்டேவார் காங்கிரஸ் அமைப்பிற்குள்தான் பணியாற்றினார். ஆனால், இந்துத்துவத்துடன் அவர் போட்ட பரிசம் (ஒப்பந்தம்) அவரையும் அவருடைய அமைப்பையும் சுதந்திரப் போராட்டத்தின் பிரதான நீரோட்டத்திலிருந்து வெகுதூரம் விலக்கிச் சென்றது.

இருபதுகளின் துவக்கத்தில் நடந்த ஒத்துழையாமை இயக்கம் சுதந்திரப் போராட்ட இயக்கம் முழுவதிலும் ஆங்கிலேய எதிர்ப்பு ஒற்றுமையின் உச்சியைக் குறிப்பதாக இருந்தது. ஆனால் அந்த இயக்கத்தை 1922ல் வாபஸ் வாங்கி அதற்கு துரோகம் இழைத்தது ஹெக்டேவாரின் இகழ்ச்சியைத்தான் பெற முடிந்தது. அவர் கூறினார்:

"மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவாக நாட்டில் (தேசியவாதத்திற்கான) உத்வேகம் குறைந்து கொண்டு வருகிறது. மேலும் சமூக வாழ்க்கையில் இந்த இயக்கம் உருவாக்கியுள்ள தீய சக்திகள் அச்சமூட்டுகிற வகையில் தலைதூக்க துவங்கிவிட்டன. ஒத்துழையாமை இயக்கம் எனும் பாலைக் குடித்த பாம்பு படமெடுத்துச் சீறி நாட்டில் கலகத்தைக் கிளப்பி விடுகிறது" (பிஷிகார் 1979.பக்கம் 7)

1927ல் சுதந்திரப் போராட்டம் மீண்டும் துளிர்விட்டது. சைமன் கமிஷனுக்கு எதிராக சக்தி மிக்க கிளர்ச்சியாக அது உருவெடுத்த போது ஆர்.எஸ்.எஸ் அதிலிருந்து கட்டுப்பாடாக ஒதுங்கி நின்றதோடல்லாமல் நாகப்பூரில் தனது முதலாவது பயிற்சி முகாமை ஏற்பாடு செய்வதில் மும்முரமாக இருந்தது. 1927 செப்டம்பரில் நாகப்பூர் ஒரு மதக் கலவரத்தைச் சந்தித்தது. அதில் ஆர்.எஸ்.எஸின் தீவிர ஈடுபாடு தெளிவாகத் தெரிய வந்தது.

லாகூர் காங்கிரஸ் தீர்மானித்த முழுச் சுதந்திரம் என்ற தேசிய இலட்சியத்தின் பின்னணியில் 1930ல் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் மீண்டும் ஆர்.எஸ்.எஸ் இருக்கும் இடமே தெரியவில்லை. காங்கிரஸ் முடிவின்படி 1930 ஜனவரி 26ம் நாளைச் சுதந்திர நாளாக நாடு முழுவதும் கொண்டாடும்போது ஆர்.எஸ்.எஸ்

தொண்டர்களை ஹெக்டேவார், பாரதத்தாயின் மணிக்கொடியை-வணங்கும்படிக் கேட்டுக்கொண்டார். அன்று நாடு முழுவதும் பொதுவாக நிலவிய போராட்ட வடிவத்திற்கு முற்றிலும் முரணாக, தடியெடுத்த அந்த ஆர்.எஸ்.எஸ் தொண்டர்கள் காலனி ஆட்சியின் காவலர்களை எதிர்கொள்வதில் எங்குமே ஈடுபடவில்லை.

1940இல் கோல்வாக்கர், ஹெக்டேவாரிடமிருந்து பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, இந்துவாதத்தின் முஸ்லீம் எதிர்ப்பு, ஆங்கிலேய ஆதரவின் அழுத்தத்தை மேலும் துல்லியமாக்கினார் கோல்வாக்கர் கூறுகிறார்.

“தேசம் என்ற நமது கருத்துக்கு அடிப்படையாகஅமைந்த நிலப்பரப்பு சார்ந்த தேசியம் மற்றும் பொதுவான அபாயம் போன்ற தத்துவங்கள் நமது உண்மையான இந்து தேசியத்துவம் என்ற ஆக்கபூர்வமான, உத்வேகம் ஊட்டக்கூடிய உள்ளடக்கத்தை நம்மிடமிருந்து பறித்துவிட்டதோடு சுதந்திரத்திற்கான இயக்கங்கள் பலவற்றையும் வெறும் ஆங்கிலேயர் எதிர்ப்பு இருந்தாலே அதனை தேசபக்திக்கும் தேசியத்திற்கும் சமமாகக் கொள்ளப்பட்டது. இந்த பிற்போக்குக்கான பார்வை ஒட்டு மொத்த சுதந்திரப் போராட்டம், அதன் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் மீது படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. (கே ால்வாக்கர்,1966 பக்.142-43)”

இது, அநேகமாக, தேசபக்திக்கும் தேசியத்திற்கும் ஆர்.எஸ்.எஸ்ஸின் வரையறுப்புக்கு தெள்ளத் தெளிவான விளக்கமாக இருக்கும். இந்து வாதத்தின் இந்தக் கருத்தியலாளர் காலனிய நுகத்தடியைத் தூக்கி எறிவதற்கான சுதந்திர இயக்கப் பேரவையின் நடுவிலிருந்து கொண்டு ஆங்கிலேய எதிர்ப்பு தேசியத்தை இகழ்ந்துரைப்பது வியப்பூட்டுவதாகத் தோன்றலாம். ஆர்.எஸ்.எஸ்ஸின் 'தேசிய வாத தேசபக்த' கூக்குரல் மற்றும் ஆர்வம் அனைத்தும் சாராம்சத்தில் முஸ்லீம் ஆதிக்கத்தைப் பற்றிய கடந்தகால நினைவுகளுக்கெதிராக திருப்பப்படுவதாகும். ஆர்.எஸ்.எஸ்ஸைப் பொறுத்தவரையில் கடைசி முகலாயப் பேரரசன் அவுரங்கசீபின் மீது சிவாஜி நடத்தியத் தாக்குதலுக்குப் பிறகு வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது. ஆங்கிலேய ஊடுருவல்,

முகலாய ஆட்சியின் மிச் சொச்சங்களை உடைத்தெறியத்தான் உதவியது. எனவே, ஆங்கிலேயர்கள் நேசசக்திகள், சிவாஜியின் போர் தொடரப்படவேண்டும். அது ஒரு இந்து சாம்ராஜ்யம் ஏற்படுத்துவதில் முடிய வேண்டும்.

மகாராஷ்ட்ராவில் தோன்றி வளர்ந்த ஆர்.எஸ்.எஸ் தெள்ளத் தெளிவான மராட்டியச் சாயலைக் கொண்டிருக்கிறது. இந்துமுஸ்லீம் பிளவுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் சுதந்திரப் போராட்டத்திற்கு அழிவேற்படுத்த காலமெல்லாம் முயன்று வந்த ஆங்கிலேயக் காலனியாதிக்க வாதிகளுக்கு ஆர்.எஸ்.எஸ் கைப்பாவையாக விரும்பிச் செயல்பட்டது.

1940 – 41 ஒத்துழையாமை இயக்கத்திலும் 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும், 1945 46இல் இந்திய தேசிய ராணுவ வழக்கை மையமாகக் கொண்ட எழுச்சியின் போதும் பம்பாய் கப்பற்படைக் கலகத்தின் போதும் ஆர்.எஸ்.எஸ் காணாமல் போய்விட்டதில் வியப்பில்லை.

இன்று மாறிய சூழ்நிலையில் அதே வரலாறு தொடர்கிறது. மீண்டும் ஒருமுறை அதே பழைய ஏகாதிபத்திய சக்திகளின் நவகாலனிய அச்சுறுத்தலை நாடு எதிர்கொண்டிருக்கும்போது அதே சங்பரிவார் எஜமானனின் ஏவலுக்காகக் காத்திருக்கிறது. அமெரிக்க மேலாதிக்கத்தையும், அய்.எம்.எப், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவின் மீது ஆதிக்கம் வகிப்பதையும் எதிர்ப்பதற்கு அவர்களுடைய தேசியத்திலும் தேச பக்தியிலும் இடம் இல்லைதான். அவர்களுடைய ஆர்வங் களெல்லாம் பழங்காலத்திலேயே வரலாற்றுக்குள் புதைந்துவிட்ட முஸ்லீம் ஆட்சிச் சின்னங்களை நோக்கியே திரும்பியிருக்கிறது.

இது, பொருளாதாரக் கீழ்ப்படிதலிலிருந்து இந்தியாவின் இரண்டாவது சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு அழிவை ஏற்படுத்துகிறது. அரசியல் சுதந்திரத்திற்கும், எதேச்சாதிகார அமைப்பிலிருந்து மக்கள்ஜனநாயக சமூகத்திற்கு மாறிச் செல்வதற்கும் தீராத அச்சுறுத்தலாக உள்ளது. அத்தோடு கம்யூனிச சவால்மறைந்ததற்கு பிறகு அவர்களுடைய ஏகாதிபத்திய எஜமானர்கள் புதிதாக கண்டு கொண்ட இஸ்லாமிய அபாயத்தை எதிர்ப்பதில் அவர்களுக்குச் சேவை செய்கிறது.

இந்து ராஜ்யத்திற்கான சித்தாந்தம் நாஜிசத் திலிருந்து பெறப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ்,பி.ஜெ.பி.யின் பிரச்சாரகர்கள் ஒவ்வொரு நாளும் கம்யூனிஸ்டுகளை மார்க்ஸ் என்ற ஜெர்மானியனின் அந்நியக் கருத்தியலை கடன் வாங்கியதாக குற்றம் சாட்டு கிறார்கள். அதேநேரத்தில் தங்களை அசல் உள்ளூர் என்று கூறிக் கொள்கிறார்கள். இருப்பினும் தனது கருத்தியலையும் அமைப்பு முறையையும் வடிவமைப்பதற்கு கோல்வாக்கரை ஆழ்ந்த செல்வாக்குச் செலுத்தியது ஒரு ஜெர்மானியனே தவிர வேறு யாருமல்ல(பிறந்தது ஆஸ்திரியாவாக இருப்பினும்). இந்த ஜெர்மானியனின் பெயர்தான் அடால்ப் இட்லர்.

"நாம் அல்லது நமது தேசியத் தன்மையின் வரையறை" என்ற நூலில் கோல்வாக்கர் எழுதுகிறார்:

"ஜெர்மானிய தேசியப் பெருமை இன்று எல்லோராலும் பேசப்படும் ஒரு விஷயமாக இருக்கிறது. தேசம் மற்றும் அதனுடைய பண்பாட்டின் தூய்மையைக் காப்பாற்ற, யூதர்களை நாட்டைவிட்டே துரத்தியதன் மூலம் ஜெர்மனி உலகையே குலை நடுங்க வைத்தது. இங்குதான் தேசியப் பெருமை அதன் சிகரத்தை எட்டியது. இனம் மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் ஆணிவேர்வரை ஆழமாகக் கொண்டவர்களை ஒரு முழுமையில் ஒன்று சேர்ப்பது என்பது எவ்வளவு இயலாதது என்பதையும் ஜெர்மனி உணர்த்தியுள்ளது. இது இந்து தேசத்தில் நாம் நன்கு படித்துப் பயன் பெற வேண்டிய படிப்பினையாகும்"

இந்த நாஜிசத்தை இந்திய வடிவில் மாற்றுவதற்கு பொருள் என்னவென்றால், இந்து அல்லாதவர்கள் தங்களுடைய மொழி, பண்பாடு, மதம் மற்றும் பிற அடையாளங்கள் அனைத்தையும் விட்டொழிக்க வேண்டும். ஒருக்கால் இதனை அவர்கள் செய்யத் தவறினால், கோல்வாக்கர் அவர்களை இன்னமும் நாட்டில் இருக்க விடலாம். அனால் அதற்கு நிபந்தனை என்னவென்றால், அவர்கள் முழுதுமாக இந்து தேசத்திற்கு தங்களைக் கீழ்ப்படுத்திக் கொள்ள வேண்டும், எதையும் கோரக்கூடாது, எந்த உரிமைகளையும் பெறத் தகுதியில்லை, எந்த சிறப்புச் சலுகையும் பெறமுடியாது.

ஆக, ஆர்.எஸ்.எஸ்ஸின் இந்து ராஜ்யம் என்ற சித்தாந்தம் முழுதும ஜெர்மானிய நாஜி அரசிடமிருந்து பெறப்பெற்ற தேயன்றி வேறல்ல.

புராண நாயகன் இராமனை தேசீய நாயகனாக மாற்றியதன் பின்னணியில் பி.ஜெ.பி.யின் திட்டம்.

பிரபல இதிகாசங்களை வால்மீகி ராமாயணமும் துளசிதாஸ் ராமாயணமும் அவற்றிற்கே உரிய பாணியில் நல்லவை கெட்டதை வெற்றி கொண்டதை இராமன் என்ற புராண கதாநாயகனை கடவுளின் அவதாரம் என்கின்ற அளவிற்கு உயர்த்துவதன் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. இவ்வாறாக இந்துமக்களுக்கு இராமன் ஆன்மீகம்மற்றும்மதவரையறைக் குட்பட்டவனாகிறான். அவனுடைய பாத்திரத்தின் நேர்மை, மரியாதைக்குரிய உத்தமன், அவனுடைய ஆட்சியின் தரம், ராமராஜ்யம் ஆகியனவற்றை ஒழுக்க நெறிகளையும், சமூக நீதியையும் வலியுறுத்த மக்கள் பரவலாக மொழி வழக்கிலேயே எடுத்தாள்வதுண்டு. நவீன இந்துவாதம் கண்டுபிடிக்கப்படும் வரை இராமனை தேசீய நாயகனாக்குவது குறித்து யாருமே நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.

இந்துத்துவத்தின் நிறுவனரான சாவார்கர் இந்து இந்தியா வின் அடையாளங்களைத் தேடும் தன்னுடைய அரிய முயற்சியில் எழுதுகிறார்:

"நம்மில் சிலர் இராமனை அவதாரமாக வழிபடுகின்றனர். சிலர் அவனை நாயகனாகவும் போராளியாகவும் வியந்து பாராட்டு கின்றனர். அனைவரும்அவனை நமது இனத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் மிகவும் புகழ்வாய்ந்த அரசனாக நேசிக்கின்றனர்."

அதிலிருந்துதான், இந்துத்துவத்தை பரிந்துரைப்பவர்கள், "நம்முடைய இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் புகழ் வாய்ந்த அரசன்" என்ற கருத்தைப் பிடித்து தொங்கிக் கொண்டிருக் கிறார்கள்.

1927 சரஸ்வதி பூஜையன்று ஆர்.எஸ்.எஸ் துவக்கப்படுவதற் கான நாளாகக் குறிக்கப்படுகிறது. இராமனின் கொடி எனக் கருதப்படும் காவிக் கொடியே ஆர்.எஸ்.எஸ்ஸின் கொடியாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

இறுதியாக, இராமர் கோயிலை இடித்துவிட்டு கட்டியதாக கருதப்படும் பாபர் மசூதி, சங்பரிவாரின் உருவாக்கத்தை பூர்த்தி செய்ய உதவியது. அங்கு இராமன் பாபருக்கு எதிராக நிறுத்தப்பட்டான்.

ஒரு கலாச்சார, மத புராண உருவமான இராமன் முஸ்லீம் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து குறிவைத்து அம்மை நாணேற்றி நிற்கும் தேசிய நாயகனாக மாற்றப்பட்டது. இவ்வாறாக முழுமை பெற்றது.

இராம கதையில் இராவணன் சீதையை சிறைபிடித்தான் என்றால், சங்பரிவாரைச் சேர்ந்த இராவணர்கள் தங்கள் அரசியல் சூழ்ச்சிக்காக இராமனையே சிறை பிடித்து விட்டார்கள். இராமனை இவர்களுடைய பிடியிலிருந்து விடுவித்து அவனுடைய பக்தர்களின் ஆன்மீக மத வரையறைக்குள் அவனை திரும்பவும் நிலை நாட்ட வேண்டும்.

இராமனை தங்களுடைய நாயகனாக ஏற்கும்படி முஸ்லீம்களை ஆர்.எஸ்.எஸ் திரும்பத்திரும்ப எச்சரிக்கிறது. அதன் பிறகு அனைத்துப் பிரச்சினைகளும் முடிவடைந்துவிடும் என உறுதி கூறுகிறது. ஆனால் இந்தக் கோரிக்கை மிகவும் அகங்காரம் கொண்டதும் ஏளனத்திற்குரியதுமாகும். இதன் மூலம் முஸ்லீம்களை அவர்களுடைய நம்பிக்கையை உதறித்தள்ளிவிட்டு உருவ வழிபாட்டுக்குத் திரும்புமாறு கோருவதாகும். ஏனெனில் வேறு எந்த வழியிலும் முஸ்லீம்கள் இராமனை நாயகனாக ஏற்க முடியாது. மேலும் குறிப்பாக, பல்வேறு இந்துப் போக்குகள், "ஒரே தெய்வம்" என்பதை நோக்கி முன்னேறிக் கொண்டும் அருவமாகப் பார்த்துக் கொண்டும் இருக்கும் இந்த காலகட்டத்தில் இது மிகவும் பிற்போக்கான கோரிக்கையும் கூட.

மற்ற புராணக் கதைகளுக்கு முற்றிலும் மாறாக, அனைத்தையும் இழந்த இதிகாச ராமன், தாழ்ந்த சாதியினருடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டு அவர்கள் உதவியுடன் பார்ப்பன அரசனான இராவணனை தோற்கடிக்கிறான். இது சாதாரண மக்கள் இராமனுடன் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ள உதவுகிறது. அவனுடைய செல்வாக்கு இந்துக்களின் பல்வேறு பிரிவினரிடையே இன்னமும் ஒரேமாதிரியாக இல்லை. இந்துக் களில் சில பிரிவுகள், குறிப்பாக தலித்துக்கள் அவனுடைய சில

செயல்களை விமர்சிக்கிறார்கள். அவற்றை உயர்சாதி மனோபாவத்தின் அறிகுறி என்று நினைக்கிறார்கள்.

இந்துக்களும் முஸ்லீம்களும், 1857ல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போராட்ட வீரர்களையும், ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்ட தியாகிகளையும்அவர்களுடைய தேசிய நாயகர்களாக மிகச் சரியாகவே பார்க்கிறார்கள். இதே உணர்வை வெளிப்படுத்து மாறு சங்பரிவார் மீது கோரிக்கை வைக்க வேண்டும். ஏனெனில் கோல்வால்கர் ஒரு புறம் இருந்தாலும், இந்திய தேசியத்தின் துவக்கம் ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கத்தில்தான் உள்ளது.

இந்து எனும் பெருமிதம் ஒரு மாயை

'ஊக்கமுடைய ஒரு இந்து தன்னுடைய இந்து அடையாளத்தை கர்வத்தோடு பகிரங்கப்படுத்த வேண்டும்' என்பது சங்பரிவாரின் ஜனரஞ்சக முழக்கங்களில் ஒன்று. அடுத்தடுத்து வந்த அந்நியப் படையெடுப்பாளர்களிடம் இந்துக்கள் தோற்றுப் போனதற்குரிய காரணம் இந்துவெனும் பெருமை இல்லாதிருந்ததே என்பது சங்பரிவார் கருத்தியலாளர்களின் கணிப்பாகும். இந்துக்களைப் புழுங்கச் செய்யும் அடையாளச் சின்னங்களைஇடித்துத் தள்ளுவது மட்டுமே இழந்த இந்துப் பெருமையை மீட்டெடுக்கும். இவ்வாறாக, இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் பாபர் மசூதியை இடித்துத்தள்ளியதன்மூலம்இந்துக்களின்புனிதப்போர் துவங்கி விட்டது. காசி மற்றும் மதுராவிலுள்ளமசூதிகளிலிருந்து ஜீம்மாமசூதிவரை ஏன் தாஜ்மகால்கூட அந்தநீண்டபட்டியலில் இடம் பெற்றுள்ளன என்பது தெளிவு.

இந்துப் பெருமை எனச் சொல்லப்படுவதன் சாராம்சத்தை கண்டுகொள்ள இந்து வாதத்தின் பரிணாம வளர்ச்சியின் வரலாற்றை மீண்டும் கணக்குப் பார்ப்போம். கி.மு. பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டில் ஈரான் நாட்டு மலைப் பகுதியிலிருந்து வந்த ஆரியர்களே இந்தியாவின் மீது முதன் முதலில் படையெடுத்தவர்கள். இந்து இந்தியா எனும் தன்னுடைய கோரிக்கைக்கு மெருகூட்டும் முகமாக சங் பரிவார், வரலாற்று நிகழ்வுப் போக்குகள் அனைத்தையும் நிரூபணமற்றதாக்கி, வரலாற்றைப் பொய்யாக்கி ஆரியர்களை இந்த நாட்டின் உண்மையான தொல்குடியினராகக் காட்டும் தத்துவத்தைப் புனைகின்ற மிகப்பெரிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

இது முற்றிலும் பொய்யானது. சிந்து வெளிப் பள்ளத்தாக்கின், அரப்பா, மொகஞ்சதாரோ நாகரீகத்தைச் சேர்ந்தவர்களே இந்தியாவின் தொல்குடியினர். ஆரியர்களுக்கு முந்தைய இந்தியக் குடிகள் அநேகமாக திராவிடர்களாக இருந்திருப்பர். அவர்களுடைய நாகரீகம், ஆரியர்களுடையதைவிட மிகவும் மேன்மையடைந்த தந்தை வழிக் குலமுறையையும் இராணுவ ஜனநாயகத்தையும் கொண்ட அரை நாடோடி இடையர் வகை பழங்குடிகளாக இருந்தனர். வேறு வகையில்கூறினால், ஆரியர்கள், வர்க்க முறைகளுக்கு முந்திய சமூகத்திலிருந்து வர்க்க சமூகத்திற்கு மாறிச்

செல்லும் இடைப்பட்ட நிலையில் இருந்தனர் எனலாம். சிந்து நதிப்படுகை மற்றும் வடமேற்கு இந்தியாவிலிருந்து அவர்கள் படிப்படியாக கங்கை நதிப் படுகை மற்றும் வடகிழக்கு இந்தியா விற்குப் பரவினர். எனினும் இந்த முன்னேற்றத்தில், உள்ளூர் மக்களுடனான எண்ணற்ற போர்கள் அடங்கியிருக்கிறது. மாறிச் செல்லும் இந்த கட்டம் முழுதும் ரிக்வேதத்திலும் பிற வேதங் களிலும் பிரதிபலிக்கின்றன.

இந்த கால கட்டத்தில் ஆரியர்களின் மதத்தை வேதகால மதம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. தேவர்களும், அசுரர்களும் வேதகால கடவுள்களாக இருந்திருப்பினும், ஒருவருக்கொருவர் பகைமைகொண்ட இருபிரிவினருக்குரியது தான் அந்த கடவுள்கள். ஈரானியர்களுக்கு நிகழ்ந்ததற்கு நேர் எதிராக பிற்காலத்தில் அசுரர்கள் தீயசக்திகளாயினர். ஆரியர்களின் எதிரிகளான உள்ளூர் திராவிடர்கள் அரக்கர்களாக உருவகப்படுத்தப்பட்டனர்

வேதகால ஆரியர்கள் பல கடவுள்களை வழிபடும் நடை முறையைக் கொண்டிருந்தனர். அந்தக் கடவுள்கள் இயற்கையின் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்தின. குறிப்பாக இந்திரன் நடுநாயகமாக இருந்தான். அந்தக் காலத்தில் கோயில்கள் இல்லை. பூசாரித் தொழில் செய்வோரும் இல்லை. மரணத்திற்கு பின் தெய்வ தண்டனை என்ற கருத்தும் இல்லை. உடலிலிருந்து ஆத்மா பிரிந்து செல்லக் கூடியது என்ற கருத்தும்கூட, அப்பொழுது வளர்ச்சியடைந் திருக்கவில்லை. வளர்ந்து வரும் சமூக உழைப்புப் பிரிவினையை பிரதிபலிக்கும் வகையில் வருணாசிரம தர்மம் அப்பொழுதுதான் தோன்றியிருந்தது.சுருங்கக் கூறினால் வேத கால மதம், ஆரிய சமூகத்தின் மாறிச் செல்லும் கட்டத்தை பிரதிபலிப்பதாகவே இருந்தது. அவர்கள் வாழ்வுக்குப்பிறகு என்ன என்பதைவிட இவ்வுலக வாழ்வைப்பற்றித்தான் மிகவும் அக்கறை கொண்டிருந்தனர்.

ஆரிய தொல்குடியினர் விவசாயக் குடிகளாக நிலைபெறத் தொடங்கிவிட்ட அதேவேளையில், பல கொடுங்கோல் அரசுகளும் அடிமைகளைச் சொந்தமாகக் கொண்ட தொடக்க கால குடியரசுகளும் கி.மு. முதல் ஆயிரம் ஆண்டின் தொடக்கத்தில் தோன்றியது. இந்தக் காலகட்டத்தில்தான், வேதகால மதமானது பார்ப்பனீயம் என்று சொல்லக் கூடிய ஒன்றுக்கு வழிவிட்டது.

வர்ணாசிரம கட்டமைப்பு ஒரு சமூக கட்டிறுக்கத்தைப் பெற்றது.அங்கு வேதங்களில் புலமை பெற்றவர்களாகவும் கணிசமான அதிகாரத்தைக் கொண்டவர்களுமான பார்ப்பனர் என்ற ஒரு தனி சமூகப்பிரிவு தோன்றியது.

மனுநீதி, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வருணாசிரமத்திற்கும் சாதி அமைப்பிற்கும் தெய்வீக அங்கீகாரம் அளித்ததுடன் பார்ப்பன சாதியினர் தெய்வப்பிறவிகளாக்கப்பட்டனர். வேதகால கடவுள்கள் இரண்டாம்நிலைக்கு தள்ளப்பட்டு புதிய கடவுள்கள் முதன்மைக்கு வந்தன. அவற்றுள் பிரும்மாதான் முதற் கடவுள்.

உள்ளூர் மக்கள் வெற்றி கொண்ட ஆரியர்களுடன் இரண்டறக் கலந்துவிட்டதால் அவர்களின் கடவுள்களும் பார்ப்பன கடவுளர் தொகுதியில் நுழைந்துவிட்டனர். சாதி அமைப்பின் இறுக்கமான வளர்ச்சியையொட்டி கடவுள்களும் கூட சாதிக்கடவுள்களானது. உபநிஷத்துக்களின் வருகையையொட்டி, ஆத்மாவின் குடியேற்றம் என்ற கருத்து மேலோங்கத் தொடங்கியது. மேலும் கர்மா எனும் கருத்து மறுபிறவியின் தத்துவ அடிப்படையானது.

பார்ப்பனீயக் காலகட்டத்தை உபநிடதக்காலம் என்று கூட சித்தரிப்பதுண்டு. அக்கால கட்டத்தில்தான் ஆறுவிதமான வைதிக சிந்தனா முறைகள் வளர்ந்தன. ஆத்மா பிரும்மத்துடன் ஒன்று கலக்கிறது என்ற ஆழ்ந்த மாயை சித்தாந்தத்தை போதிக்கும் வேதாந்தம் பார்ப்பனர்களின் ஆதாரத் தத்துவமாக இருந்தது. பார்ப்பனர்களுடன் போட்டி போட்டு வந்த சத்திரியர்கள் பொருள் முதல் வாதத்திற்கு நெருங்கி வரக்கூடிய சாங்கிய சித்தாந்தத்தின் பக்கம் இருந்தனர்.

வைதிக சித்தாந்தத்தின் எல்லைக்கு வெளியே சாருவாகம், லோகாயுதம் போன்ற பொருள் முதல்வாத சித்தாந்தங்கள் தோன்றின. அவைகள் கடவுளின் இருத்தலைக்கூட மறுத்தன. அவைகள் பார்ப்பன ஆதிக்கத்தை பொதுமக்கள் நிராகரிப்பதன் பிரதிபலிப்பாக இருந்தன.

பார்ப்பனீயம் தன் சொந்த சுமையின் காரணமாக அழிந்து கொண்டிருந்தது. பரந்துபட்ட வெகு மக்கள் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக உணர்வுற்ற போராட்டத்தின் ஒரு வடிவம் என்ற ரீதியில் கி.மு.4வது மற்றும் 5வது நூற்றாண்டின் போட்டி

போக்குகளான புத்தமதத்திற்கு பின்னாலும் ஓரளவிற்கு சமண மதத்திற்குப் பின்னாலும் அணி திரளத் தொடங்கினர்.

இவ்விரண்டு போக்குகளும் சாதி அமைப்பு முறையையும், அமைப்பாக்கப்பட்ட பூசாரி முறையையும் நிராகரித்தது. புத்தமதம் பார்ப்பனீயத்தை அகற்றியது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. முதலாவது மற்றும்இரண்டாவதுநூற்றாண்டுவரை மௌரியர் மற்றும் குஷான் அரச வம்சத்தினரின் கீழ் புத்தமதம் அரசுமதமாகக்கூட இருந்தது. சிக்கலான சடங்குகளோடு, வெகுமக்களிடமிருந்து அந்நியப்பட்டிருந்த பார்ப்பன மேட்டுக் குடியினரால் பௌத்தர்களின் ஜனரஞ்சக வாதத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

பௌத்தத்துடனான போராட்டத்தின் போக்கில் பார்ப்பனீயம் ஆதிசங்கரரின் தலைமையில் தீவிரமாக மறுவடிவமைப்புச் செய்து கொண்டது. இவ்வாறுதான் இந்துவாதம் என்று அறியப் படும் கட்டம் தோன்றியது. கோயில்கள் என்ற கருத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் பௌத்தர்களே. வெகுமக்களைக் கவருவதற்காக கடவுள்களின் மிகப்பெரிய விக்கிரகங்களைக் கொண்ட பிரும்மாண்டமான இந்து கோயில்கள் கட்டப்பட்டன. யாத்திரைத்தலங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மக்கள் திரள்வதை உத்தரவாதம்செய்வதற்காக பொது விழாக்களும், மத ஊர்வலங்களும் தொடங்கப்பட்டன.

கடவுள்களை வெகுமக்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவர அவதாரம் என்ற கருத்து பிறந்தது. புராணக் கதைகளின் நாயகர்களான ராமனும், கிருஷ்ணனும் கடவுளின் அவதாரங்கள் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு ரட்சகர்கள் ஆக்கப்பட்டனர். திருமாலின் அவதாரங்களில் ஒன்றாக புத்தர்கூட சேர்த்துக் கொள்ளப்பட்டார். பௌத்தம் தொலைவாகவும் விரிவாகவும் பரவி ஒரு உலக மதமாக இருக்கையில், தோன்றிய நாட்டிலேயே அது முற்றாக ஒழிக்கப்பட்டது மிகவும் வியப்புக்குரியது.

இந்துவாதம் என்றால் சாராம்சத்தில், அமைப்பு முறையைப் பாதுகாப்பதற்காக வெகுமக்களை செல்வாக்குச் செலுத்தவும் கட்டுப்படுத்தவும் புதிய வழிமுறைகளை இட்டு நிரப்புவது என்று பொருள்.

சமூகப் பாகுபாடுகள், சாதி, இன, நிற வேற்றுமைகள், மற்றும் வர்க்க உறவுகளின் சிக்கல்கள் ஆகியவற்றின் வளர்ச்சியால் முடிவற்ற ஒன்றுக்கொன்று நல்லிணக்கமற்ற குழுக்களாக இந்துக்கள் உடைந்து கொண்டே போனார்கள்.

'சர்வ பந்த சம்பவ' என்பதற்கான வெற்று முயற்சி சிலரால் மேற்கொள்ளப்பட்டது. (பின்னால் இது'சர்வ தர்ம சம்பவ்' என்று மாற்றப்பட்டு, இந்திய மதச்சார்பற்ற தன்மைக்கு அடிப்படையாக பிரகடனப்படுத்தப்பட்டது). பிற்காலத்தில் முதலில் இஸ்லாத்தின் தாக்கத்தினாலும் பிறகு கிறிஸ்துவத்தின் தாக்கத்தினாலும் மதச் சீர்திருத்த இயக்கங்கள் உருவாகத் தொடங்கியது.

கபீர், குருநானக், சைத்தன்யர் மற்றும் பல சீர்திருத்தவாதிகள், மத்தியகாலத்தில் 'பக்தி இயககம்' என்ற ஒன்றை உருவாக்கி, இந்து மதத்திலுள்ள சாதி அமைப்பு முறைகளையும், சிக்கலான சடங்கு முறைகளையும் கடுமையாகத் தாக்கினார்கள். கபீர், அனைத்து சீர்திருத்தவாதிகளையும் விட தனிச்சிறப்பு வாய்ந்த சீர்திருத்தவாதியாகத்திகழ்ந்தார். சாதாரண மக்களின் சார்பாக அவர் பார்ப்பனர்களின் மூடநம்பிக்கைகளுக்கும் போலித்தனத்துக்கும் எதிராக மூர்க்கமான தாக்குதல்களைத் தொடுத்தார்.

ஆங்கிலேயர் காலத்தில் இராஜா ராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, விவேகானந்தர், போன்றவர்கள் சீர்திருத்தங்களைப் பரப்பினர். அவர்கள் அனைவரும் 'இயல்வன யாவும் இறையுருவே' என்ற வேதாந்த சித்தாந்தத்தை ஆதரித்ததோடு இறுக்கமான சாதி அமைப்பை இல்லாததாக்க முயன்றனர்.இருப்பினும் இந்தப் போக்குகள் ஒவ்வொன்றும் மற்றுமொரு பிரிவைக் கூட்டுவதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை.

இந்து வாதம் தெய்வீக அங்கீகாரம் பெற்றதாகக் கருதும் இறுக்கமான சாதி அமைப்பு முறையுடன் என்றென்றைக்குமாக கதவை மூடிக்கொண்டு தேசிய மதமாகவே நின்று விட்டது. பௌத்தம், கிறித்துவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் உலகளாவிய மதங்களாக வளர்ந்துவிட்டன. எனவே விசுவ இந்து பரிஷத் என்பது இந்து மதத்தை உலக மதமாக முன் நிறுத்துவதற்கான பாசாங்கு மட்டுமல்ல தேவையற்ற ஒன்றும் ஆகும்.

போலியான இந்து பெருமிதத்தை உயர்த்திப் பிடிப்பதற்கும் கூடுதலாக, இந்து வாதத்தின் அனைத்து முற்போக்கு சீர்திருத்த இயக்கங்களும் இந்துவாதத்திற்கு ஒரு தாராள நவீனக்

கண்ணோட்டத்தைத்தர முயன்றது. அதிலும் குறிப்பாக அதன் சாதியக் கட்டமைப்பின் இறுகிய தன்மையை ஒழிக்க முயன்றது. ஆனால் இந்து வைதீகத்தனம் மரபுகள் மற்றும் மரபு வழி நிறுவனங்கள் ஆகியவற்றின் வலிமையைக் கொண்டு இதைத் தொடர்ந்து வெற்றிகரமாக எதிர்த்துக் கொண்டு வருகிறது. தற்பொழுது முதன்முறையாக சங்க் பரிவாரின் ஆசியுடன், சீர்திருத்தங்கள் ஏற்படுத்திய விளைவுகளை இல்லாததாக்கும் பொருட்டு ஓர் எதிர் இயக்கம் தோன்றியுள்ளது. தற்பொழுது எழுச்சியுற்றிருக்கும் இந்துத்துவத்திலிருந்து இந்துவாதத்தின் சமூக சீர்திருத்தங்களை எதிர்பார்ப்போர் முட்டாள்களின் சொர்க்கத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எனலாம். இந்த இயக்கம் நமக்கு அளித்திருப்பதெல்லாம் வேண்டுமென்றே செய்யப்பட்ட, வரலாற்று புரட்டல்; சாமியார்கள், மடாதிபதிகளின் சமூக, அரசியல் கவசத்தை உறுதிப்படுத்தியது. உயர்சாதி இந்துக்களின் மூர்க்கத்தனம் புதுப்பிக்கப்பட்டது. பஜ்ரங்தளம் மற்றும் சிவசேனையின் ரவுடி இராணுவத்தை ஏவியது, ஆகியவை மட்டும்தான். இதைத்தான் சங்பரிவாரின் கருத்தியலாளர்கள் இந்துத்துவத்தின் எழுச்சி என்றும், கல்சா வழியில் சத்திரியப் பெருமையின் வளர்ச்சி என்றும், நிச்சயமாக இந்துப் பெருமையின் அறுதியிடல் என்றும் பாராட்டுகிறார்கள்.

மதம் என்பது சுற்றுப் புறச்சூழலுக்கு எதிராக மனிதனின் ஆதிபத்தியமின்மையின் வெளிப்பாடு என்று சரியாகவே சொல்லப்பட்டு வருகிறது. சுற்றுப்புறச் சூழல் விதித்துள்ள எல்லைகளைத் தகர்த்து முன்னேறுவதற்கான மாயையை மதப் புனைவாற்றல் அளிக்கிறது. ஆகையினால்தான், குறிப்பாக, துன்பம் வரும் காலங்களில் எல்லாம் மக்கள் திரளாக மதத்தை நோக்கி விரைகிறார்கள்.

இருப்பினும் மாயை, மாயை மட்டும்தர்ன். அதனால் ஒருக்காலும் யதார்த்தத்தை இட்டு நிரப்பிவிட முடியாது. இந்துப் பெருமையையும், குரங்குக் கடவுளின் மிகு மனித ஆற்றலையும் உதவிக்கு அழைத்ததன் மூலம் ஒரு பாழடைந்த கட்டிடத்தை இடித்துத் தள்ளலாம்; நிராயுதபாணிகளான நிரபராதிகளான ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்யலாம், முடமாக்கலாம். ஆனால் இந்துப் பெருமை கொண்ட சக்திகளின் கூட்டுக் களவாணித்தனத்துடன் தங்கு தடையின்றி நுழைந்து வரும் நவ காலனீய சக்திகளை இவர்களால் எதிர்த்துப் போராட முடியாது.

'மதச் சார்பற்ற' இந்துவாதம் என்னும்மாயை.

இந்தியா மதச் சார்பற்றதாக இருப்பதற்குக் காரணம், இந்துக்கள் மிகப் பெரும்பான்மையினராக இருப்பதுதான் என்று சங் பரிவார் திரும்பத்திரும்ப கூறுகிறது. இதனையொட்டி, இந்து வாதத்தின் உள்ளியல்பான சகிப்புத்தன்மை என்று கூறப்படுவதை மதச்சார்பின்மைக்கு சமமானதாக கருதுவதும் மதச்சார் பின்மையின் அதிகாரபூர்வமான அபிப்பிராயமாக அறிவிக்கப் படுகிறது. ஆக, இந்துமத மதிப்பீடுகள் இந்தியாவின் மதச் சார்பின்மையின் பிரச்சாரத்திற்குதொடர்ந்து துணைக் கழைக்கப்படுகிறது.

இப்போது, இந்து வெகுமக்களிடம் இந்துமதவெறி அபாயகர மான வகையில் தீவிரப்படுதல், நாட்டின் அரசியல் வாழ்வில் சாமியர்கள் மற்றும் மடாதிபதிகளின் செல்வாக்கு வளர்ந்து வருவது, சமூகத்தின் அனைத்துக்கழிவுகளும் கசடுகளும் பஜ்ரங்தளம், சிவசேனா போன்ற அமைப்புகளில் உறுதிப்பட்டு வருவது, அதிகரித்து வரும் முஸ்லீம் கூட்டக்கொலைகள், அரசின் பல்வேறு துறைகளிலும் வகுப்புவாத ஒரவஞ்சகத்தை வெளிப்படையாகவேக் காட்டுவது, கல்வியுலகில் அனைத்து வகையான மாறுபட்ட கருத்துக்களின் பாலும் சகிப்புத்தன்மை யற்ற போக்கு ஆகியவற்றை தற்போதைய இந்துத்துவ எழுச்சி குறியீடுகளாகக் கொண்டிருக்கிறது. தூய்மையானதொரு இந்து அரசு என்பதற்கு ஜனநாயகத்தையும் மதச்சார்பின்மையையும் நிராகரிப்பது என்றுதான் அர்த்தம் கொள்ள முடியும் என்பதை இந்தக் குறியீடுகள் அய்யத்திற்கிடமின்றி நிரூபிக்கின்றன.

இரண்டாவதாக, கிறித்துவ மதமும், புத்த மதமும் ஆதிக்க மதங்களாக இருக்கும் வளர்ச்சி அடைந்த நாடுகள் பலதும் இந்தியாவைவிட அதிகமான மதச்சார்பின்மையுடன் இருக்கின்றன. குறிப்பாக, கிறித்துவ மதம் மிகவும் வைதீகமான, சகிப்புத்தன்மை- யற்ற மதமாகும். (மதக்கருத்துக்களுக்கு எதிராக, நம்பிக்கையில்- லாதவர்களைக் கண்காணிக்க தேவாலயத்தால் அமைக்கப்பட்ட குழுவை நினைவுபடுத்திக் கொள்க). மேலும், அய்ரோப்பிய நாடுகள் பலவற்றில் கிறித்துவதேவாலயம் மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாக இருந்தது. இருப்பினும், காலப்போக்கில் கிறித்துவ

மதத்தில் பல்வேறு போக்குகள் தோன்றியது. வெற்றிகரமான முதலாளித்துவப் புரட்சிகள் தேவாலயத்தை அரசிலிருந்து பிரித்தது. மதத்தையும் அரசையும் பிரிப்பதை ஆதாரமாகக் கொண்ட மதச்சார்பின்மை என்ற கருத்தே மேற்கத்திய நாடு களின் வெற்றிகரமான முதலாளித்துவப் புரட்சிகளிலிருந்துதான் தோன்றியது.

இந்து வாதத்தில் உள்ளியல்பாக இருப்பதாகக் கருதும் மதச்சார்பின்மையை முன்மொழிபவர்கள், இஸ்லாமில் அவர்கள் கருதும் உள்ளியல்பான சகிப்புத்தன்மையின்மையை எதிர்க்கும்போது மட்டுமே முன்வைக்கிறார்கள். இஸ்லாம் உள்ளியல்பாக சகிப்புத்தன்மையற்றது என்ற இந்தக் கருத்தோடு இந்து வெகு மக்களில் பெருந்திரளானோர் உடன்படுகிறார்கள். எனவே இஸ்லாமின் வளர்ச்சியை ஆழமாக ஆராய்வது அவசியம்.

ஆறாம் நூற்றாண்டில் அரேபியாவில் வசித்துவந்த பல்வேறு தொல்குடிகள் பரஸ்பரம் அழித்துக் கொள்ளும் மோதலில் ஈடுபட்டனர். ஒட்டக வாணிபம் குறைந்ததும் அதன் விளைவாக நிலத்திற்கான தேவை அதிகரித்ததும் இதற்குப்பின்னால் இருந்த முக்கியக் காரணிகள். இத்தகைய சமூகப் பொருளாதாரக் சூழலில் போரிடும் தொல்குடிகளை இணைத்து ஒன்று படுத்துவதற்கான இயக்கமாக இஸ்லாம் எழுந்தது. பல்வேறு தொல்குடி உருவ வழிபாடுகளை ஒன்று சேர்த்து, மிக உயர்ந்த ஒரே கடவுளாக அல்லாவுக்கு கீழ்ப்படிவது என்ற முகம்மதின் போதனைகள் இந்த வரலாற்று நிலைமையில்தான் பரவத் தொடங்கியது. முகம்மதின் தொல்குடித் தலைவர்களும் வணிகப் பெருமக்களும் ஆரம்பத்தில் அவர் கருத்துக்களுக்கு விரோதிகளாக இருந்ததால் அவர் மெக்காவைவிட்டுச் செல்ல நேர்ந்தது. மதினாவின் விவசாயச் சோலைகளில் இருந்த மக்கள் மெக்காவின் அதிகாரவர்க்கத்தினரோடு போராடிக் கொண்டிருந்தனர். அவர்கள் முகம்மதுக்கு பலமான அடித் தளமாக அமைந்தனர். அவர்களின் உதவியோடு முகம்மது இறுதியில் மெக்காவைக் கைப்பற்றினார். மெக்கா ஒரு முக்கிய மான மதம் மற்றும் தேசிய மையமாக எழுந்ததால் கொய்ரீஷ் வணிகப் பெருமக்களும் இஸ்லாமை ஏற்றுக் கொண்டதுமல்லாமல் இஸ்லாமின் தலைவர்களும் ஆனார்கள்.

இஸ்லாம் ஒருபுறம் வியாபாரமும் கைத்தொழிலும் செய்துவந்த நகரத்தாருக்கும் மறுபுறம் நாடோடி பெடோயியன்களுக்குமான மதமாக இருந்தது என்றுஏங்கல்ஸ் எழுதினார்.

அரேபியர்களின் தேசிய மதமாகத் தோன்றிய இஸ்லாம், விரைவிலேயே ஒரு உலக மதமாக மாறியது. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் ஸ்பெயினிலிருந்து மத்திய ஆசியாவைத் தாண்டி இந்தியாவின் வடக்கெல்லையைத் தொடும் மிகப் பரவலான பிராந்தியத்தின் ஒரே மதமாக வளர்ந்து, அடுத்த நூற்றாண்டுகளில் அது வட இந்தியாவில் பெருமளவுக்கு பரவியது. அப்புறம் இந்தோனேசியா, காகசியா மற்றும் பால்கன் அரசுகளின் ஒரு பகுதி மக்கள் மத்தியிலும் விரிவடைந்தது.

இஸ்லாமிய நம்பிக்கைக்கான (ஜிஹாத்) புனிதப் போரின் வெற்றிகள் அரேபியர்களை ஒன்றுபடுத்தவும்புதியபிரதேசங் களைக் கைப்பற்றவுமான அரேபியர்களின் தேவையினால் எழுந்த படையெடுப்புகளாகும். இந்தப் புனிதப்போர்கள் இஸ்லாம் பரவுவதற்கு முக்கியமான பங்கு வகித்தன. ஆனால் பைசாண்டின் மற்றும்சிசாமிட் பேரரசுகளின் மக்கள் இஸ்லாமுக்கு எந்த எதிர்ப்பையும் காட்டாமல் இருந்ததற்கு, உள்ளூர் நிலப்பிரபுக்கால் அவர்கள் கொடுமையாக ஒடுக்கப்பட்டதுதான் காரணம்.

அரேபியர்களால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் விவசாய வெகுமக்களின் குறிப்பாக இஸ்லாமை ஏற்றுக் கொண்டவர்களின் கடப்பாடுகள் பெருமளவுக்கு குறைந்தன.

இந்தியாவில் மனிதத் தன்மையற்ற பார்ப்பனீய சாதிக் கொடுமை இஸ்லாம் பரவுவதற்கு வசதி செய்தது.

இஸ்லாமின் எளிமை, கிழக்கிலுள்ள தந்தைவழி, நிலப்பிரபுத்துவ அரசுகளிலுள்ள விவசாய வெகுமக்களிடையே அது பரவ பெருமளவுக்கு காரணமாக இருந்தது.

பிற்காலத்தில் முஸ்லீம் இறையியலாளர்களும், மதச்சார்பற்ற அறிஞர்களும் ஜிகாத்தின் கட்டளைகளுக்கு மறுவிளக்கம் கொடுத்தார்கள். இந்துவாதத்தையும் கூட புனிதநூலைக் கொண்ட மதமாகவும் இராமனையும் கிருஷ்ணனையும் அவர் கள் காலத்திய தேவதூதர்களாகவும் மறுவிளக்கமளிக்க முயற்சிக்கப்பட்டது. பீகாரில் முஸ்லீம் இறையியல் வட்டாரத்தில்

சமீபத்தில் நடைபெற்ற விவாதத்தில் ஒரு முஸ்லீம் அறிஞர் கஃபீர் என்னும் முத்திரையை இந்துக்களிடமிருந்து திரும்பப் பெற வேண்டும் என்று கோரியதை வாசகர்கள் நினைவு கூற வேண்டும்.

ஷரியத் எனப்படும் மதச்சட்டங்களினால் இஸ்லாம் சமூக மற்றும் குற்றவியல் சட்டங்களை வகுத்துள்ளது. இஸ்லாமிய குடும்ப ஒழுக்க நெறிகளில் ஆணுக்குப் பெண் கீழ்ப்படியும் தந்தை வழி மற்றும் தொல்குடி மனப்பான்மைகள் செல்வாக்குச் செலுத்தவே செய்தன. இது அநேகமாக எல்லா மதங்களிலும் பொதுவாகவே உள்ளது. இருப்பினும் அரேபியாவின் ஸ்தூலமான சமூக நிலைமைகளில், மனைவியின் பால், கணவனின் குரூரமான நடத்தையைக் கண்டிப்பதன் மூலமாகவும், பெண்களுக்கு சொத்துரிமையை குறிப்பிடுவதன் மூலமும் - வரதட்சணை, வழிமுறை உரிமைகளில் குரான் பெண்களின் நிலையை உயர்த்த செய்தது.

மதத்தின் பதாகையின் கீழ் இஸ்லாம் பெருமளவுக்கு மக்களை ஒற்றுமைப்படுத்திய போதிலும்முஸ்லீம் நாடுகளில் தேசிய முரண்பாடுகளும் வர்க்க முரண்பாடுகளும் தீவிரமடைந்து கொண்டேச் சென்றன. இது இஸ்லாமுக்குள் பல்வேறு போக்குகளும் எழுந்ததில் பிரதிபலித்தன.

ஆரம்பகாலத்தில் தோன்றிய, மிகப்பரவலான அத்தகைய ஒரு போக்குதான் ஷியாயிசம். அது அரேபியர்களுக்குள் நடைபெற்றதொருபோராட்டமாக,முகம்மதின் வாரிசுகளுக் கிடையில் அதிகாரத்திற்கான போராட்டமாகத் தொடங்கியது. ஆனால் மிக விரைவிலேயே பாரசீகத்தை வெற்றி கொண்ட அரேபியர்களுக் கெதிரான பாரசீகர்களின் அதிருப்தியாக வளர்ந்தது. ஷியாயிசம் ஈரானின் அரசுமதமாக இன்று வரை இருந்து வருகிறது. இருப்பினும் உலகில் பெரும் பான்மையான முஸ்லீம்கள் சன்னீயிசத்தைப் பின்பற்றுகின்றனர். எட்டாவது, ஒன்பதாவது நூற்றாண்டுகளில் சன்னிக்களின் ஒரு பிரிவான முப்ஜிலிட்கள் 'குஃரான் கடவுளின் படைப்பல்ல', மக்களால் எழுதப்பட்ட நூல், மனிதனுக்கு சுயவிருப்பாற்றல் உண்டு எனும் கருத்தடிப்படையில், முஸ்லீம் தத்துவங்களை பகுத்தறிவு உணர்வோடு விளக்க முயன்றார்கள். ஏட்டுச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு வரட்டுத் தத்துவ விளக்கவுரைச்

சிந்தனா முறைக்கு எதிராக, கூடுதல் தாராளமனப் பான்மையோடு விளக்கி உரைக்கும் சிந்தனா முறைகள் சில,இஸ்லாமுக்குள்ளிருந்தே எழுந்தன. இத்தகைய விளக்கவுரைகள் முஸ்லீம் உலகின் கூடுதல் வளர்ச்சியடைந்த பிராந்தியங்களில் செல்வாக்குப்பெற்றது.

சூஃபியிசம் ஷியாயிசத்திலிருந்து வளர்ந்தது. இருப்பினும் அதனை சன்னீக்களும் ஏற்றுக் கொண்டார்கள். சூஃபியிசத்தைக் கடைபிடித்தவர்கள் மேலோட்டமான சடங்குகளில் அக்கரை காட்டுவதைவிட்டு, மறைமெய் சார்ந்து கடவுளோடு கலந்துவிட விழைந்தார்கள். "அனைத்தும் கடவுளுக்காக" என்று கடவுளைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த பார்வையின் கராறான அர்த்தத்தில், அவர்கள் குஃரானிலிருந்து வழிவிலகிச் சென்றார்கள். ஆரம் பத்தில் சூஃபிக்கள் வைதீக முஸ்லீம்களால் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் பிற்காலத்தில் சமரசம் ஏற்பட்டது.

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் ஜனநாயகப் புரட்சிகளுக்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களுக்கும் ஏற்ப முஸ்லீம் மரபில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. பல முஸ்லீம் நாடுகளில் ஷரியத்தின் செல்வாக்குப் பகுதிகள் குறைந்தன. சட்ட வரையறைகள் மதச் சார்பற்ற தாக்கப்பட்டன. அரசு, முஸ்லீம் மத குருக்களின் பிடியிலிருந்து விலக்கப்பட்டது. துருக்கியில் கமால்பாஷா தலைமையில் ஜனநாயகப் புரட்சி நடைபெற்றது. அங்கு குடியரசு நிறுவப்பட்டபின் புரட்சிகர சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இஸ்லாம், இந்து வாதத்துடன் - பல கடவுள்களையும் உருவக வழிபாட்டையும் கொண்ட பல நூற்றாண்டுகளின் பழமைவாய்ந்த ஒரு மதத்துடன் - அக்கம்பக்கமாக வாழ்ந்திருக்கிறது என்பதற்கு இந்தியா தனிச்சிறப்பான உதாரணமாகத் திகழ்கிறது. வெறுமனே மத நம்பிக்கையின் மட்டத்தில் பார்த்தால் இரண்டு மதங்களும் சந்திக்கும் அம்சம் ஒன்று கூடக் கிடையாது. ஆனால் இரண்டு மதங்களையும் சேர்ந்த அடித்தட்டு மக்கள் ஒரு பொதுவான வாழ்க்கையை, அபிலாஷைகளை பல நம்பிக்கைகளை பகிர்ந்து கொள்கின்றனர்.

நமது நாடு இந்து முஸ்லீம் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தினால், எவ்வாறு பாக்கிஸ்தானிலும் வங்கதேசத்தில் உள்ள

இந்துக்கள் இந்தியாவின் மீது ஓர் அனுதாப இழையைக் கொண்டிருக்கிறார்களோ அதேபோன்று இந்தியாவிலுள்ள முஸ்லீம்களும் கொண்டிருப்பார்கள் என்பது தெளிவு.

எனினும், பிரிவினைக்குப் பின், இந்திய முஸ்லீம்களின் அரசியல், காங்கிரஸ் கட்சியைச் சுற்றித் திரும்பியது. தனது ஓட்டுச் சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்தோடு இந்து மத அடிப்படை வாதத்துக்கு சலுகைகள் அளிக்கப்பட்டதை சரிக்கட்டுவதற்காக காங்கிரஸ் கட்சி, முஸ்லீம்மத அடிப்படைவா த சக்திகளுடன் அடிக்கடி அரசியல் மற்றும் சமூக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. இந்த விளையாட்டிலும் அதற்கே உரிய எல்லைகள் உண்டு. சமீபத்திய நிகழ்ச்சிகள் முஸ்லீம்களை ஏமாற்றமடையச் செய்துவிட்டது. காங்கிரஸ் சிக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலையிலிருந்து அறுவடை செய்வதற்காக இப்போது ஜனதாதளம் போன்ற கட்சிகள் குதித்திருக்கின்றன. ஆனால் இந்த கட்சிகளின் கூட்டாளிகள் காங்கிரஸில் கூடிக்குலாவிய அதே கூட்டாளிகள்தான்.

பி.ஜெ.பி இந்து அரசுக்காக வாதாடுவதும் அது கடைபிடிக்கும் மதவெறியும், அதற்குரிய எதிர்நிலையில், முஸ்லீம்கள் மத்தியிலுள்ள மத அடிப்படைவாத சக்திகளைத்தான் பலப்படுத்திக் கொண்டிருக்கிறது. இருதாரமணம் அல்லது பலதாரமண முறையை முற்போக்கானதொரு சமூக சீர்திருத்தத்தின் ஒரு பகுதி என்றவகையில் எதிர்ப்பது என்பதுவேறு; ஆனால், அந்த எதிர்ப்பை முஸ்லீம் மக்கள் தொகை பெருக்கத்துடன் தொடர்பு படுத்துவது என்பது படுமுட்டாள்தனமானது. அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது என்பது நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் கூறுகளேயொழிய அதற்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை. பலதாரமணமுறையை இந்தியாவிலுள்ள கணிசமான முஸ்லீம்கள் கடைபிடிப்பதில்லை. மக்கள் தொகையில் ஆண்–பெண் விகிதாசாரத்தைக் கொண்டு பார்க்கும்போது பலதாரமணமுறை என்பது, ஒரு சமுதாயத்தின் பொதுவான நிகழ்வாகவோ மக்கள் தொகை பெருக்கத்திற்கு எந்த வழியிலும்காரணமாகவோ ஒருக்காலும் இருக்க முடியாது.

ஒரே மாதிரியான சமூகச் சட்டம் மற்றும் முஸ்ம் பெண்களின் உரிமைகளுக்காக பி.ஜெ.பி யின் கவலை என்பது ஒரு பெரும்

மோசடியாகும். இது முஸ்லீம் அடையாளத்தின்மீது பி.ஜெ.பி நடத்தும் முழுமையான தாக்குதலின் ஒரு பகுதியாகும். ஷாபானு வழக்கு பற்றிய சச்சரவில் பி.ஜெ.பி குதித்ததால்தான் வைதிக முஸ்லீம்களிடம் எதிர் விளைவை ஏற்படுத்தி, முஸ்லீம் மக்கள் மத்தியில் கூட நல்ல ஆதரவைப் பெற்றிருந்த ஒரு முற்போக்குச் சீர்திருத்தத்திற்கு பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

இந்து இந்தியாவில் முஸ்லீம்களுக்கு இரண்டாந்தரக் குடியுரிமையை பிரச்சாரம் செய்வதன்மூலம் பி.ஜெ.பி. முஸ்லீம்களிடம் பாகிஸ்தான் ஆதரவு உணர்ச்சிகளைத்தான் பலப்படுத்துகிறது.

அதேபோல், இந்துஅடையாளத்தை இந்திய அடையாளத்துக்கு சமமாகக் காணும் பி.ஜெ.பி யின் ஏமாற்றுவித்தை ஒரு புறமிருக்கட்டும்; முஸ்லீம் அடையாளத்தை இந்துக்களின் கலாச் சார அடையாளத்துடன் இணைப்பதற்கான அதன் கோரிக்கை 'சேர்ந்தமைந்த' இந்திய அடையாளத்தை நேரடியாகவே மறுதலிப்பதாகும். சங் பரிவாரின் இத்தகைய கருத்தியல் தாக்குதல் இந்திய முஸ்லீம்களிடையில் பாகிஸ்தான் பற்றிய மாயை தொடர்ந்து நீடிப்பதற்கும் பலமடைவதற்கும் தான் உதவும்.

பாகிஸ்தானின் இருத்தலும் இந்திய முஸ்லீம்களிடையே பாகிஸ்தான் பற்றி நிலவும் மாயையும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முனைப்பான இந்துப் பாகுபாட்டின் காரணத்தினால் உருவானதாகும். மேலும் இந்த மாயை தொடர்ந்து இருந்துவருவதோடு, சங் பரிவாரின் இந்துத்துவ வெறிக்கூச்சலினால் புதுவாழ்வையும் பெற்றுவருகிறது.

சுதந்திரப் போராட்டத்தில் தங்களுடைய துரோகப் பாத்திரத் திற்கு உண்மையானவர்களாக இருக்கும் இவர்கள், நவகாலனீய அபாயங்களுக்கு எதிரான இந்திய மக்களின் எதிர்ப்பை பலவீனப்படுத்தவும், பிளவுபடுத்தவும் அதே பாத்திரத்தை இப்போது மீண்டும் ஏற்றுள்ளனர். மிகவும்தேவையான தக்கதொரு நேரத்தில், சங் பரிவார் தன் எஜமானனுக்கு மீண்டும் ஒரு முறை சேவை செய்து கொண்டிருக்கிறது.

எனினும் இந்திய முஸ்லீம்கள் குறித்து கடைசி வார்த்தையைக் கூறப்போவது பி.ஜெ.பி அல்ல. முஸ்லீம் இளைஞர்களின் புதிய

தலைமுறையினர் பாகிஸ்தானுடன் ஆழ்ந்த உணர்ச்சிப் பற்றேதும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் இந்திய முஸ்லீம்களாக இந்தியாவில் தங்களுடைய இடத்தை ஏற்படுத்திக் கொள்வதில் தான் ஆர்வம் காட்டுகிறார்கள். மதச் சார்பற்ற அரசு எனும் கருத்துக்களை அவர்கள் மிகவும் வரவேற்கிறார்கள். சமீபத்திய நிகழ்வுகள் அவர்களை இடதுகளோடு நெருங்கிவரச் செய்திருக்கிறது. முற்போக்கு, ஜனநாயக உணர்வுடைய அறிவு ஜீவிகள், நவீனக் கல்வி மற்றும் பெண்களின் அந்தஸ்தை உயர்த்துவது ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுத்து முஸ்லீம் சமுதாயத்திற்குள் ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்காக குரல் எழுப்புகின்றனர். முஸ்லீம் சமுதாயத்தில் வளர்ந்துவரும் இந்தப் போக்கை மதச்சார்பற்ற சக்திகள் அனைவரும் கட்டாயம் பலப்படுத்தியாக வேண்டும். இது இந்தியாவின் எதிர்காலத்தை முடிவு செய்வதில் முஸ்லீம்கள் சம பங்காளிகள் ஆவதை நோக்கி இட்டுச் செல்லும்.

உண்மையான மதச் சார்பற்ற இந்திய அரசால் மட்டும்தான் பாகிஸ்தான் இருப்பதற்கான நியாயத்தை ஒழிக்க முடியும். அவ்வாறு செய்த பின்பும் பாகிஸ்தான் இருந்தால் கூட, பாகிஸ்தானுடனான கிரிக்கட் போட்டியில் பாகிஸ்தான் மீது இந்தியா பெறும் வெற்றியை, இந்திய முஸ்லீம் இளைஞனும், தன் இந்த சகோதரனின் அதே உற்சாகத்துடன் கொண்டாடுவான்.

முடிவுரைக்கு மாற்றாக,

மார்ச் மாதத்தில் என்று நினைக்கிறேன். ஒரு தோழர் என்னிடம் கேள்வித்தாள் ஒன்றைக் கொடுத்து அதற்கு தக்க பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்த கேள்வித்தாள் பனாரஸ் பல்கலைக் கழக மாணவர் தேர்தலின்போது ABVP அகில பாரத வித்யார்த்தி பரிஷத) யால் விநியோகிக்கப்பட்டதாகும்.

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக திரும்ப திரும்பக் கூறி அலுத்துபோன பழைய குற்றச்சாட்டுக்கள் புதிய வார்த்தைகளில் அந்த கேள்வித்தாளில் தரப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டுகள் கொண்டுள்ள வெளிநாட்டு வேர்கள். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில். இந்தியா–பாகிஸ்தான் பிரிவினையில். அவசர நிலை காலத்தில் கம்யூனிஸ்டுகள் வகித்த பங்கு–இவ்வாறு தொடருகிறது அந்த கேள்வித் தொடர்.

சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்பும். இனியும் இந்தியாவிற்கு எதற்காக மார்க்சியம் என்று ABVP வியப்போடு வினா எழுப்பியிருந்தது. மிக விரைவில் பனாரஸ் பல்கலை கழகத்தில் இருந்தே. தக்க பதிலை பெற்றதுதான் வியப்புகளுக்கெல்லாம் வியப்பு!.

பனாரஸ் இந்து பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த போராட்டம் மிகத் தெளிவான கருத்தியல் பரிமாணத்தைப் பெற்றது. AISA–வின் கரங்களில் ABVP அதிர்ச்சிதரும் தோல்வியை ஏற்க வேண்டி வந்தது. இந்த வெற்றி AISA–வின் தனிப் பெரும் வெற்றியாகும். ஏனெனில். சி.பி.ஐ(எம்). ஜனதா தளம். முலாயம்சிங் பிரிவு. ஏன் மாஜி நக்ஸலைட்டுகள் ஆகியோரின் மாணவர் பிரிவுகள் AISA வின் தோல்வியை உறுதிசெய்வதற்காக வரிந்து கட்டிக் கொண்டு செயல்பட்டன.

நைனிடால். அலகாபாத் வெற்றிகளை தொடர்ந்து பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்திலும் AISA வெற்றி பெற்றது பத்திரிக்கைகளின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது.

முதல்நாள்வரை. மார்க்சியத்தின் 'மரணத்தை' சுவைத்துக் கொண்டும். இதனை நிரூபிக்கும் சான்றாக மேற்கு வங்கத்திலும். கேரளாவிலும். தங்களுடைய விரிவாக்கத்தை புகழ்ந்து கொண்டும் திரிந்த சங் பரிவார் கருத்தியலாளர்கள் உத்தரபிரதேசத்தின்

அறிவாளிகள் மையங்களில் மார்க்சியம் புத்துயிர் பெற்று எழுவதை விளக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டனர். இவ்வாறாக, நாம் பதிலடி கொடுப்பதற்குரிய காலம் கனிந்தது. இந்த ஜனரஞ்சகத் தொடரின் கருத்தும் பிறந்தது.

துருதிருஷ்டவசமாக, சங்பரிவாரின் மதவெறி சித்தாந்தத்தை எதிர்த்து எழுதப்பட்ட கட்டுரைகள் எல்லாம் அநேகமாக தாராளவாத இந்து என்ற வேலை திட்டத்திற்குள்ளேதான் சிக்கிக் கொண்டிருக்கின்றன. ராமனின் நற்குணங்களைப் புகழ்வது, இந்து சகிப்புத்தன்மையையும், சர்வமதங்களும் சமம் ஆகிய கருத்தடிப் படைகளையும், அவற்றுக்குப் பொருத்தமாக காந்தி, விவேகானந் தர் ஆகியோரின் தாராள மனம் கொண்ட இந்துதோற்றங்களை யும் துணைக்கு அழைப்பது, மதவெறியாளர்களின் மனசாட்சிக்கு அறைகூவல் விடுப்பது ஆகியவற்றை உள்ளடக்கியதாக மதச் சார்பின்மை பாதுகாப்பாளர்களின் பிரதான நீரோட்டம் அமைந்திருந்தது.

மதத்தின் பாத்திரத்தைப் பற்றிய புதிய உணர்தலுக்கு வந்து விட்டோம் என்ற போர்வையில் இடதுசாரிகளின் தலைவர்களும் இந்த நீரோட்டத்தில் சேர்ந்து கொண்டனர். CPI,CPI(M) ஆட்களுக்கு மிகவும் நேசம் மிக்கவராக இருந்த நேரு கூட தீண்டப்படாதவராக மாறியதால் மதச்சார்பற்ற, இடதுசாரி பிரசுரங்களில் நேருவை நீக்கிவிட்டு சந்தடியின்றி காந்தி புகுந்தார். இது உண்மையில் போலி மதச்சார்பின்மையே.

மதச்சார்பற்ற சக்திகளின் பரந்த ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டியதன் தேவையைப் போலவே இந்து ராஜ்யத்தின் பாசிசப் பண்பும் மிகச் சரியாக அடையாளம் காணப்பட்டது. ஆனால், இடதுசாரிகளின் கரு ஒன்றை உறுதிபடுத்துவதற்கு மீண்டும் புதிய அழுத்தம் தராததால் இது கருத்தியல் மற்றும் அரசியல் சந்தர்ப்ப வாதத்திற்கு வழியையும் திறந்தது. எதிர்தாக்குதலின் பின் பலமின்றி மதச்சார்பின்மை பற்றிய ஒட்டு மொத்த பிரச்சாரமும் மதவெறியின் தீவிரமான தாக்குதல்முன்நெடுஞ்சாண்கிடையாக விழுந்து விடக்கூடும் என்பது சொல்லாமலேயே விளங்கும். வேறு யார்தான் இந்த சவாலை ஏற்றுக் கொள்வது? நிச்சயமாக, அந்த கடமை மார்க்சிய–லெனினிய வாதிகளுடையதுதான்.

மதவெறி பாசிசத்திற்கு எதிரான நமது ஜனரஞ்சக பிரச்சாரத்தில் நாம் கீழ்வரும் பிரச்சினைகளை எழுப்பினோம்.

அ) இந்துக்களின் சின்னத்தை, குறிப்பாக ராமராஜ்யத்தை சுதந்திரபோராட்டத்தில் துணைக்கு அழைத்துக் கொண்ட காந்திய வழிமுறைதான், முஸ்லீம் அந்நியமாதலுக்குப் பின்னால் உள்ள முக்கிய காரணம் என்பதை நிறுவினோம்.

ஆ) எல்லா மதங்களையும் சமமாக மதிப்பது என்று மதச்சார்பின்மைக்கு ராதாகிருஷ்ணன் தந்தவியாக்கியானம் தான் அரசு கோட்பாடாக்கப்பட்டது. மாறாக, நவீன அரசு ஒன்றின் கொள்கையானது 'எல்லா மதங்களையும்விலக்கி வைப்பது' என்பதாக மட்டுமே இருக்க முடியும் என நிறுவினோம்.

இ) மதப் பாத்திரமான ராமனை தேசத்தின் கதாநாயகனாக முத்திரையிடுவதை கேள்விக்குள்ளாக்கி, அந்த தகுதி மக்களின் கதாநாயகனான பகத்சிங்கை மட்டுமே சாரும் என நிறுவினோம்.

ஈ) நாட்டை ஒன்றுபடுத்தும் சக்தி 'இந்து ராஷ்ட்ரா' என்பதிலுள்ள உண்மையை கேள்விக்குரியதாக்கினோம். வரலாறு ஏதேனும் வழிகாட்டுதலை தருமானால் அது, 'இந்து ராஷ்ட்ரா' என்பது எண்ணற்ற அரசுகளாக சிதறுண்டு போய்விடும் என்பதுதான். சிவசேனாவின் 'மராத்தா ராஷ்ட்ரா' வின் குணக்குறிகள் அக்கம்பக்கமாக வளர்ந்து கொண்டிருப்பது இதனைத்தான் சுட்டிக்காட்டுகிறது என்பதை நிறுவினோம்.

உ) 1942 உட்பட முழு சுதந்திர போராட்ட இயக்கத்திலும், நாட்டுப் பிரிவினையை விரைவுபடுத்தியதில், முஸ்லீம் மக்கள் அனைவரையும் பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட வேண்டும் என்ற கோரிக்கைக்கு உட்பட்டு அந்த பிரிவினைக்கு துணை நின்றதில், அவசர நிலையின் இறுதிக் கட்டத்தில் இந்திரா காங்கிரசுடன் கூடிக் குலாவியதில், ஆர்.எஸ்.எஸ்ஸின் பாத்திரத்தை கேள்விக் குள்ளாக்கினோம். ஆர்.எஸ்.எஸ் வெளிநாட்டு கருத்தியலான நாஜிசத்தில் இருந்து வெளிப்படையாகவே உத்வேகம் பெற்றது என்பதை நிறுவினோம்.

ஊ) சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லீம் பூதத்தை கிளப்பி காலனியாதிக்க எஜமானர்களுக்கு எதிரான இலக்கை சிதறடிப்பது என்ற ஆர்.எஸ்.எஸ் பாணியை கேள்விக்குள்ளாக்கினோம்.

மறுமுறையும் இந்தியா நவீன காலனியாதிக்கத்தால் கடுமையாக அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் துல்லியமான தொரு நேரத்தில் ஆர்.எஸ்.எஸ் அதே வரலாற்றை மீண்டும் ஒரு முறை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது என்பதை நிறுவினோம்.

எ) பாகிஸ்தான் எதிர்ப்பை இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் அச்சாணியாக கொண்டிருப்பதை கேள்விக் குள்ளாக்கினோம். பாகிஸ்தானுடன் நட்புரீதியானதோர் அணுகுமுறையை மேற்கொள்வதும் ஜம்மு-காஷ்மீர் தகராறுகளில் ஆக்கப் பூர்வமானதோர் சகநிலை திரும்ப முயற்சிப்பதும் இந்தியாவின் மதவெறி சூழ்நிலையை மாற்று வதற்கு தீர்மானகரமானவைகள் என்பதை நிறுவினோம். இந்தியா, பாகிஸ்தான், மற்றும் பங்களாதேஷ் சுதந்திர அரசுகளின் காமன்வெல்த் என்ற ஆலோசனையும்கூட முன் வைத்தோம்.

– மிகவும் பழமைப்பற்றாளர்களான முதலாளி மற்றும் நிலப்பிரபுவர்க்கங்களையும், உயர்சாதியினரையும் பி.ஜே.பி தனது சமூக உள்ளடக்கமாக கொண்டிருக்கிறது.

சமூக, அரசியல் வாழ்க்கையில் சாமியார்கள் மற்றும் மடாதிபதிகளின் தலையீடு அதிகரித்துக் கொண்டே வருகிறது;

கரசேவை என்ற பெயரில் சமூகக் கழிசடைகள் போர் வெறி கொண்ட அமைப்பாகி வருவது, புதிதாக தோன்றியுள்ள அறிவாளிக் கூட்டம் விடாப்பிடியாக வரலாற்றைத் திரித்து பொய்யாக்கிக் கொண்டிருப்பது, பகையூட்டும் வதந்திகளைப் புனைந்து பரப்புவதை அமைப்பாக்குவது, கல்வி நிலையங்களில் உள்ள எதிர்ப்புக் குரல்களை அடக்குவது–

இவைகளெல்லாம் சேர்ந்து பாசிசத்திற்கான கச்சிதமான தோர் கலவையாக வடிவமைந்திருக்கின்றன என்பதை அறுதி யிட்டுக்கூறி இதற்கு எதிராக ஒரு எதிர்தாக்குதலைக் கட்டியமைத்தோம்.

ஒரு பின் சிந்தனை

பாபர் மசூதி இடிக்கப்பட்டுவிட்டது. வரலாற்று நியாயத்திற்காக அந்த இடத்திலேயே பாபர் மசூதியை மீண்டும் கட்டவேண்டும் என்று எல்லாவகை ஜனநாயக வாதிகளும் சரியாகவே கோரினார்கள்.

இருப்பினும்,அது சாத்தியமா அல்லது இந்தக் கட்டத்தில் நடைமுறைப்படுத்தக் கூடியதுதானா என்ற சந்தேகம் நீடிக்கவேச் செய்கிறது.

தற்காலிக ராமர்கோயில் ஒன்று அங்கு ஏற்கனவே இருக்கிறது. ராவ் அரசாங்கம் போகும் பாதை – அரசியலில் இருந்து மதத்தை பிரிப்பதில் காங்கிரஸ் பாணியின் முன்மாதிரி– பின்னால் இருந்து கொண்டு சந்திரா சாமியின் மூலமும் சங்கராச்சாரியார்கள் மூலமும் செயல்படுவது, ஆகியவை கோயில் கட்டுவது என்ற விஷயத்தைத்தான் பலப்படுத்துகிறது. இதில் பலனடையப்போவது காங்கிரசா, பி.ஜே.பியா என்ற கேள்வி மட்டுமே மிஞ்சுகிறது.

பாபர் மசூதி – ராமஜன்ம பூமித் தகராறு என்பது வெறும் மதரீதியான ஒன்றல்ல என்ற சங்பரிவார் கருத்தியலாளர்கள் திரும்பத் திரும்ப கூறுகிறார்கள். அவர்கள் கருத்துப்படி, பாபர் மசூதி தேசிய அவமானத்தின் சின்னம். அது முஸ்லீம் படையெடுப்பு மற்றும் ஆதிக்கம் என்பனவற்றையும் விட தேசிய கவுரவத்தின் பிரச்னையாகும்.

வாருங்கள், தேசியம் மற்றும் தேசபக்தியின் பொருட்டு அங்கு ஏன் ஒரு தேசிய சின்னத்தை நிறுவக்கூடாது? மசூதியோ ராமர் கோயிலோ அல்ல. 1857–ல் நடந்த முதல் சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவாக ஒரு 'தேசிய சின்னம். 'அவத்' பிராந்தியம்தான் தற்போதைய அயோத்தியா இருக்கும் பகுதி இந்த கலகத்தின் மையம். எனவே, அயோத்தியில் தேசிய நினைவு சின்னம் ஒன்றை எழுப்புவதுதான் அந்த வரலாற்றுக்கு பொருத்தமான கௌரவமாக இருக்கமுடியும்.

இந்து நெறி வெறும் மதமல்ல, மாறாக, இந்தியாவில் வாழும் அனைவரையும் தழுவும் கலாச்சாரம் என்பது உண்மையானால், இந்து நெறி என்பது இந்தியராக இருப்பதற்கு சமமானது என்பது உண்மையானால், தேசிய அவமானச் சின்னம் என்பதால்தான் மசூதி இடிக்கப்பட்டது என்பதும் உண்மையானால் தேசிய கௌரவத்தின் நினைவுச் சின்னம் ஒன்றை எழுப்புவதில் சங்பரிவாருக்கு எந்த ஆட்சேபணையும் இருக்கக்கூடாது. சங்பரிவாரின் சூப்பர் தேசிய வாதிகளும், சூப்பர் தேசபக்தர்களும் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளட்டும். பிறகு தேச

விரோதிகள் என்று அவர்கள் கூறுகிற முஸ்லீம்கள் எதிர்வினை எப்படி இருக்கிறது என்று பார்க்கட்டும். திருவாளர் மல்கானி மற்றும் கோவிந்தாச்சார்யா அவர்களே நான் சொல்வதைக் கவனிக்கிறீர்களா?.

நல்லது. அவர்கள் கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் ராமர் கோவில் கட்டுவதை தடுப்பதற்கு மதச்சார்பற்ற சக்திகள் இந்த ஆலோசனையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள இதுதான் உரிய தருணம். ராமர் கோயில் இந்திய முஸ்லீம்களை அவமானப்படுத்த-வும் அந்நியப்படுத்தவும் ஒரு நிலையான ஊற்றுமூலமாக அமையும். இந்த அர்த்தத்தில் அது தேசிய சிதைவின் சின்னமாகும்.

இந்தக்கட்டத்தில், தேசிய நினைவுச்சின்னம் மட்டும்தான் கோட்பாடு தழுவிய நடைமுறை சாத்தியமான கோரிக்கையாகத் தெரிகிறது. தேசியப் பேரழிவு ஒன்றை தவிர்க்க வேண்டுமானல் தேவைப்பட்டால் எல்லாவகையான இறுகிப்போன தலைமைகளையும் மீறி தேசம் செயல்பட்டாக வேண்டும்.

தீப்பொறி வெளியீடு:
(இ.க.க(மா-.லெ),
தமிழ்நாடு மாநிலக்
கமிட்டியின்
அதிகாரபூர்வ
அரசியல்ஏடு)

பிரதிகளுக்கு:
கோ.இராதக்கிருஷ்ணன்
10,11வது தெரு,
கருணாநிதி நகர்,
அயன்புரம்,
சென்னை-600 023.
தொ.பே.எண்:611962.